## விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

**முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 11–ஆம் நாள் திங்கள்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.37/2025**

CNR.No.TNTH080020192024

| | |
|---|---|
| புகார்தாரர் | பா.பிரதீப் பாண்டியன் (வயது 42/2026)<br>த/பெ.பாண்டியன்,<br>140/W3, கள்ளர் பள்ளி தெரு,<br>கருநாக்கமுத்தன்பட்டி,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| எதிரி | சி.மீனா (வயது 54/2026),<br>க/பெ.சிவசுப்பிரமணி,<br>வார்டு–5, கதவு எண்.110/5,<br>புலிகுத்தி கிராமம்,<br>உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம். |
| குற்றம் முறையிட்டது | மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ் |
| காசோலை எண். (166943) | 27.02.2024 |
| காசோலை தொகை | Rs.7,00,000/– |
| வசூலுக்கு தாக்கல் செய்த நாள் | 02.03.2024 |
| காசோலை திரும்பிய நாள் | 04.03.2024 |
| காசோலை திரும்பிய காரணம் | Funds Insufficient |
| அறிவிப்பு அனுப்பிய நாள் | 15.03.2024 |
| அறிவிப்பு பெறப்பட்ட நாள் | 18.03.2024 |
| வழக்கு தாக்கல் நாள் | 29.04.2024 |
| தீர்ப்பு நாள் | 11.05.2026 |
| புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் | திரு.A.அருண்குமார் |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.P.ஜான் மோகன்தாஸ் |



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:19 +0530

| | |
|---|---|
| **தீர்வு** | **எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(1)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>தீர்ப்புரை</u>**

**1. <u>புகார்தாரர் வழக்கு சுருக்கம்:</u>**

1.1. புகார்தாரர் குடும்பத்தார் விவசாயம் செய்யும் எண்ணத்தில் விவசாய நிலத்தை விலைக்கு வாங்குவதற்காக எத்தனித்த சமயத்தில் எதிரிக்கும், எதிரியின் கணவருக்கும் பாத்தியப்பட்ட புலிக்குத்தி கிராமத்தில் உள்ள 11 ஏக்கர் 73 சென்ட் நிலத்தை புகார்தாரருக்கும், அவருடைய நண்பர்களுக்கும் கிரையம் செய்து கொடுக்க எதிரியும், அவரது கணவரும் சம்மதித்து அட்வான்ஸ் தொகையாக ரூ.10 லட்சம் பெற்று கொண்டு எதிரியின் கணவர் மேற்படி நிலத்தின் பட்டா, சிட்டா, பெயர் மாற்றம் செய்வதற்கு சிறிது கால அவசாசம் கோரியதில் அதற்கு பதிலாக எதிரிக்கும், எதிரியின் கணவருக்கும் பாத்தியப்பட்ட பட்டா எண்.399 ல் கட்டுப்பட்ட நிலமும், அதிலுள்ள தென்னை மரங்கள் உட்பட ரூ.10 லட்சத்திற்கு மூன்று மாதத்திற்கு ஈடாக காட்டி எதிரியும், எதிரியின் கணவரும் சேர்ந்து புகார்தாரர் மனைவி பெயருக்கு சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிந்து கொடுத்துள்ளார்கள். அதன்பிறகு பல்வேறு தேதிகளில் ரூ.26,50,000/– எதிரி புகார்தாரரிடமிருந்து பெற்றுள்ளார். அதன்பின்னர் புகார்தாரர் மேற்படி 11 ஏக்கர் 73 சென்ட் நிலத்தை பதிவு செய்ய எத்தனிக்கும்பட்சம், மேற்படி நிலங்கள் பஞ்சமர் ஜாரி நிலங்கள் என தெரிய வரவே. மேற்படி நிலங்களை புகார்தாரர் விலைக்கு பெற விரும்பாததால் மேற்படி கிரைய தொகையை எதிரியிடமிருந்து புகார்தாரர் திரும்ப கேட்டுள்ளார். அதற்கு எதிரியும், அவரது கணவரும் சம்மதித்து 15.10.2022 ம் தேதி ரூ.14 லட்சமும், மீதி



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:27 +0530

தொகையான ரூ.12,50,000/–ஐ 15.11.2022ம் தேதிக்குள் கொடுத்துவிடுவதாக கூறி அதன்படி 03.02.2023ம் தேதி எதிரி ரூ.1லட்சத்தை புகார்தாரரிடம் ரொக்கமாக கொடுத்துள்ளார். அன்றே 03.03.2023ம் தேதியிட்ட பெடரல் வங்கி, சின்னமனூர் கிளைக்குரிய 098000 என்ற எண் கொண்ட காசோலையை புகார்தாரரின் மனைவி பெயருக்கு எழுதி ரூ.10 லட்சத்திற்கு பூர்த்தி செய்து எதிரியின் கணவர் சிவசுப்பிரமணி கையொப்பமிட்டு கொடுத்துள்ளார்.

1.2. எதிரியும், எதிரியின் கணவரும் மேற்படி ஒப்பந்தப்படி நடந்து கொள்ளாததால் புகார்தாரரின் மனைவி எதிரியின் வங்கியில் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ததில் மேற்படி காசோலைக்குரிய தொகை இல்லை என எதிரியின் கணவர் கணக்கு வைத்துள்ள வங்கியால் திருப்பப்பட்டதை பொறுத்து புகார்தாரரின் மனைவி சார்பாக வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியும், அதன் பின்னரும் எதிரியின் கணவர் மேற்படி தொகையை செலுத்தாததால் புகார்தாரரின் மனைவி தரப்பில் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றத்தில் சி.சி.எண்.114/2023ன்படி வழக்கு தாக்கல் செய்து புகார்தாரரின் மனைவி வழக்கை நடத்தி வந்ததில், எதிரியின் கணவர் தரப்பு வழக்கறிஞரும், புகார்தாரரின் வழக்கறிஞரும் சமரசம் செய்ததில் மேற்படி வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

1.3. புகார்தாரருக்கு தர வேண்டிய மீதி தொகை ரூ.25,50,000/–த்தில் எதிரியும், எதிரியின் கணவரும் சில காரணங்களை குறிப்பிட்டு புகார்தாரரிடம் கெஞ்சி கேட்டு ரூ.2,20,000/–த்தை கழித்து கொள்ள வேண்டியதன் அடிப்படையில் புகார்தாரரும் வேறு வழியின்றி சமரசம் செய்து கொள்ளும் எண்ணத்தில் ஒத்து கொண்டது போக ரூ.24,25,000/–த்தில் ரூ.11,25,000/– (வழக்கு போட்ட பணம்) போக மீதி ரூ.13லட்சத்திற்கு 29.12.2023 தேதியிட்டு ரூ.6லட்சத்திற்கு என எதிரியின் கணவர் முழுவதுமாக பூர்த்தி செய்து எதிரியின் கையொப்பம் செய்து எதிரி கணக்கு வைத்துள்ளள IOB வங்கி, தேனி கிளையின்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:34 +0530

29.12.2023 தேதியிட்ட 166942 என்ற எண் கொண்ட காசோலையும், 27.02.2024ம் தேதியிட்ட 166943 என்ற எண் கொண்ட காசோலையையும் புகார்தாரரிடம் கொடுத்துள்ளார். மேற்படி காசோலையில் கடந்த 29.12.2023ம் தேதியிட்ட 166942 என்ற எண் கொண்ட காசோலையை புகார்தாரர் கணக்கு வைத்துள்ள HDFC வங்கி, கம்பம் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது Funds Insufficient என்ற காரணத்தினால் 30.12.2023ம் தேதியன்று மதிப்பு மறுக்கப்பட்டு திரும்பிய பின்னர் புகார்தாரர் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பிய நிலையில் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த பின்பு எதிரி புகார்தாரரை அணுகி கடந்த 26.02.2024ம் தேதி ரூ.3 லட்சம் மட்டும் புகார்தாரரிடம் கொடுத்து ரசீது பெற்று சென்றுள்ளார்.

1.4. ஆனால் மேற்படி தேதியில் 27.02.2024ம் தேதியிட்டு ரூ.7 லட்சத்திற்கு IOB வங்கி, தேனி கிளையின் 166943 என்ற எண் கொண்ட காசோலையை கொடுத்துள்ளது பொறுத்து எதிரியிடம் கேட்டபோது 02.03.2024ம் தேதி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும்படி கூறியதன் பேரில், புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள HDFC வங்கி, கம்பம் கிளையில் 02.03.2024ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 04.03.2024 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 15.03.2024 நாளிட்டு அனுப்பிய சட்டஅறிவிப்பை 18.03.2024ம் தேதியன்று எதிரி பெற்றுக்கொண்டு, 06.04.2024ம் தேதியன்று பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:41 +0530

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் வழக்கு" என்றும் எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

4.1. புகார்தாரர் திரு.பிரதீப் பாண்டியன் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 27.02.2024ம் தேதியிட்ட 166943 என்ற எண் கொண்ட IOB வங்கி, தேனி கிளைக்குரிய ரூ.7,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 04.03.2024–ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 15.03.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அசல் மற்றும் அலுவலக நகல் ம.சா.ஆ.3 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 18.03.2024ல் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக கணிணி இரசீது (Postal Online Tracking report) ம.சா.ஆ.4 என்றும், மேற்படி அறிவிப்பிற்கு 06.04.2024 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:48 +0530

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)-ன் கீழ் வினவிய போது ம.சா.ஆ.1 காசோலையும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். போதிய வாய்ப்பளித்தும் சாட்சி முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

7. <u>இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.</u>

7.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 27.02.2024-ம் தேதியிட்டு ரூ.7,00,000/-க்கு கொடுத்த IOB வங்கி, தேனி கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- மேற்படி காசோலையானது 04.03.2024ம் தேதியன்று Funds Insufficient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு HDFC வங்கி, தேனி கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- காசோலை திரும்பியது குறித்து 15.03.2024-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர்



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:50:56 +0530

அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி அறிவிப்பை 18.03.2024ம் தேதியன்று எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக கணிணி இரசீது (Postal Online Tracking report) ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- மேற்படி அறிவிப்பிற்கு 06.04.2024 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் புகார்தாரர் அனுப்பிய அறிவிப்பிற்கு எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

7.2. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்திருந்தார். மேலும் காசோலையில் உள்ள கையொப்பமானது தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதனை எதிரி பெற்றுக்கொண்டு, மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும் இவ்வழக்கு சம்மந்தமாக எதிரியிடம் முதல் கேள்வி மற்றும் 351(1)(b)–ன் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை மற்றும் எதிரி தரப்பில் எந்த ஒரு நபரையும் சாட்சியாக விசாரிக்க முன்வரவில்லை.

7.3. புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக எதிரி தாவா காசோலையை கொடுத்தார் என்று கூறி புகார்தாரர் தாவா காசோலையை தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி காசோலையை எதிரி கொடுக்கவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் எதிரி தரப்பில் எந்த ஒரு



AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:51:04 +0530

நபரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை மற்றும் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே காசோலை எதிரி புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

7.4. இந்நிலையில், தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றும், அதனால் இவ்வழக்கை மேல் நடத்த விருப்பம் இல்லை என்று குறிப்பிட்டு பிரிவு 147 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான மனுவை புகார்தாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். புகார்தாரரை விசாரித்தபோது அவர் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்களை உறுதி செய்துள்ளார். காசோலை வழக்குகளில் இருதரப்பினர்களும் சமரசமாக பேசி கொண்டபின்பு எதிரிக்கு தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாகாது என்று முடிவு செய்கிறது. ஆகவே மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படி எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8. முடிவு:**

முடிவாக, எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1)–ன் B.N.S.S கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் மே மாதம் 11–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:51:11 +0530

**நீதித்துறை நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**

1. **<u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.1 | திரு.பிரதீப் பாண்டியன் (புகார்தாரர்) |

2. **<u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | 27.02.2024 நாளிட்ட 166943 என்ற எண் கொண்ட IOB வங்கி, தேனி கிளைக்குரிய ரூ.7,00,000/−க்கான காசோலை அசல் |
| 2 | ம.சா.ஆ.2 | 04.03.2024 நாளிட்டு Funds Insufficient என்று திருப்பி அனுப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல் |
| 3 | ம.சா.ஆ.3 | 15.03.2024 நாளிட்ட சட்டஅறிவிப்பு மற்றும் அஞ்சலக இரசீது அசல் மற்றும் அலுவலக நகல் |
| 4 | ம.சா.ஆ.4 | 18.03.2024 ம் தேதியன்று மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக கணிணி இரசீது (Postal Online Tracking Report) |
| 5 | ம.சா.ஆ.5 | 06.04.2024 நாளிட்டு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு |

3. **<u>புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்:</u> இல்லை**

4. **<u>எதிரி தரப்பு சாட்சி, சாண்றாவணம், சான்றுபொருள்:</u> இல்லை**

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.11 16:51:18 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.**